**திக்வெல்ல பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 25 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து திக்வெல்ல பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது சம்பள மீளளிப்புக்கள் என கிடைத்திருந்த ரூபா 1,379,276 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நாட்குறிப்பு இலக்கம் 03 பதியப்பட்டதனால் ஏற்பட்டிருந்த வழுவாகும். |
| (ii) | ஊழியர் கடன் பதிவேடு மற்றும் நிதிக் கூற்றுக்கள் இடையே ரூபா 569,149 இற்கான வித்தியாசத்தை முன்னைய ஆண்டின் திரண்ட நிதிக்கு சீராக்கல் செய்திருந்தமை மீளாய்வாண்டின் போதும் சரி செய்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ரூபா 569,149 இற்கான வித்தியாசத்தினை கண்டு பிடிப்பதற்காக செற்படுகின்றேன் |
| (iii) | முன்னைய ஆண்டிற்கான வீதி விளக்கு பராமரிப்பு தொடர்பாக இலங்கை மின்சார சபையிலிருந்து கிடைத்திருந்த ரூபா 50,000 இற்கான தொகை மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணிகள் மற்றும் கட்டிடங்கள் ரூபா 1,150,000 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சொத்துக்கள் சரியான முறையில் மூலதனப்படுத்த வேண்டும் | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (v) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 25,000 பெறுமதியான வர்ண அச்சு இயந்திரம் மற்றும் நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 40,178 தொகைக்கான புத்தகங்கள் வினியோகிக்கும் கருமபீடம் என்பவற்றை நிலையான சொத்துக்களின் கீழ் மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | சொத்துக்கள் சரியான முறையில் மூலதனப்படுத்த வேண்டும் | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (vi) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நிலையான வைப்புக்களுக்கான வட்டி வருமானம் ரூபா 72,918 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | வட்டி வருமானம் கணக்கீடு செய்ய வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (vii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 2,390,150 இற்கான பங்களிப்புத் தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகையை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 380,205,508 தொகைக்கான 07 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப் பட்டுள்ள மீதிகளிடையே, கூட்டுத்தொகை ரூபா 235,475,564 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன. | தொடர்புடைய மீதிகளில் உள்ள வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 195,925,636 தொகைக்கான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப் படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் ஆவணப் படுத்தப்படும் என அறிவிக்கின்றேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 143 | திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்பு பேரேடு மாதாந்தம் கூட்டப்பட்டு கூட்டுத்தொகை பிரதான பேரேட்டுக் கணக்குடன் சீராக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | வைப்புக்கள் பதிவேடு மற்றும் பிரதான பேரேட்டுக் கணக்கு மாதாந்தம் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| | (ii) விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீகரிக்கப்பட்ட செலவுகளுடன் செலவு விடயங்களின் உண்மையான செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று கணக்குகளுடன் சமர்ப்பித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 2002 நவம்பர் 28 திகதிய ஐஏஐ/ 2002/02 இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணினிகள் துணைக் கருவிகள் மற்றும் மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று நாளது வரை ஆக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் நாளது வரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | 2015 ஜூலை 10 திகதிய 02/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த 02 வாகனங்கள் தொடர்பாக குறிப்பிட்ட விடயங்கள் மேற்கொண்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 24,879,324 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 22,632,503 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 3,330,579 | 3,312,587 | 2,982,033 | 2,829,054 | 3,697,123 | 5,805,656 | 5,966,523 | 2,498,500 |
| வாடகை | 4,886,100 | 4,491,445 | 4,691,447 | 1,583,180 | 4,996,100 | 4,688,694 | 4,566,433 | 1,783,182 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 1,252,500 | 1,340,125 | 1,340,125 | -- | 1,136,000 | 1,292,591 | 1,292,591 | -- |
| ஏனைய வருமானங்கள் | 19,454,181 | 21,828,643 | 14,954,688 | 76,128,243 | 31,414,735 | 33,870,641 | 11,245,403 | 69,254,288 |
| மொத்தம் | 28,923,360 | 30,972,800 | 23,968,293 | 80,540,477 | 41,243,958 | 45,657,582 | 23,070,950 | 73,535,970 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு மொத்த வருமானம் ரூபா 28,923,360 தொகை யாகக் காணப்பட்டதுடன், சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 30,972,800 தொகை ஆக இருந்தது. ஆரம்ப நிலுவை ரூபா 73,535,970 தொகையுடன் ரூபா 104,508,770 அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 23,968,293 தொகை காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட மொத்த நிலுவைத் தொகை ரூபா 80,540,477 ஆகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தினை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) வீதவரி** | | |
| மீளாய்வாண்டிற்கான ஆரம்ப நிலுவை வீதவரி ரூபா 2,545,700 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 3,312,587 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 5,858,287 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 3,022,768 தொகை ஆகக் காணப்பட்டமையால், வருட இறுதியில் ரூபா 2,835,612 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தினை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) ஏக்கர் வரி**

| | | |
|---|---|---|
| நிலுவை ஏக்கர் வரி ஆரம்ப மீதி ரூபா 53,942 தொகையாகக் காணப் பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டை யிடல் ரூபா 6,941 ஆகும். மீளாய்வாண்டின் போது அறவீடுகள் ஏதும் இன்மையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 60,883 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தினை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**2.2.4 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை ரூபா 1,464,186 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 4,491,445 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 5,955,631 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 4,372,451 தொகையாக காணப்பட்டமையால், மீளாய்வாண்டு இறுதியில் உள்ள வாறு ரூபா 1,583,180 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. வருட ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவைத் தொகையில் அறவீடுகள் 15 சதவீதம் அளவில் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தினை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**2.2.5 ஏனைய வருமானங்கள்**

**நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 2,183,582 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 73,944,661 தொகை முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை பெற்றுக் கொள்வதற்காக பிரதான செயலாளரிடம் விண்ணப் பித்துள்ளேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பாய்வு

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | குப்பைகளை அகற்றும் குறிக் கோளுடன் சபைக்குச் சொந்தமான 01 ஏக்கர் 16 பர்சஸ்களுக்கான பொது மயானம் ஒன்றில் காபனிக் உர நிலையம் ஒன்று நிர்மாணிக்கப் பட்டிருந்த போதிலும் பொது மக்களின் எதிர்ப்பின் காரணமாக காபனிக் பசளை உற்பத்தியொன்று மேற்கொள்ளாமல் சேகரமாகும் பசளைகள் தனியார் காணிகளில் அகற்றப்பட்டு மண் போடப்பட்டிருந்தது. | முறைப் பிரகாரம் அகற்றப்பட வேண்டும். | குப்பைகளை அகற்றுவதற்கு குறிப்பிட்ட காணி ஒன்று காணப் படவில்லை. |
| (ii) | சபைக்குச் சொந்தமான சந்தை வளவு ஒன்றில் உயிர்வாயு அலகு ஒன்று நிர்மாணிப்பதற்கான பிலிஸரு செயற்திட்டத்தின் கீழ் ரூபா 999,233 தொகை மீளளிப்புச் செய்யப் பட்டிருந்ததுடன், ரூபா 1,010,712 இற்கான தொகை ஒப்பந்தக் காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. இந்த செலவுகளுக்கு மேலதிகமாக சபை நிதியத்தில் இருந்தும் ரூபா 11,479 தொகை செலுத்தப்பட்டு பூர்த்தி செய்யப் பட்டிருந்த உயிர்வாயு அலகு பரிசோதனை சந்தர்ப்பத்தில் செயற்படாமல் காணப்பட்டது. அதன் காரணமாக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,010,712 தொகைக்கான செலவுகள் பயனற்றதாயுள்ளது. | சிக்கல்களை உரிய நிறுவ னங்களுக்கு அறிவித்து செயற்படு நிலையில் பேணப்பட வேண்டும். | உயிர்வாயு உற்பத்தி ஆரம்பிக்க ப்பட்ட போதிலும் தோல்வியடை ந்தது அறிவுரை பெறுவதற்கான பல நிறுவனங்களுடன் தொடர்பு கொண்ட போதிலும் தேவையான ஆலோசனைகள் பெற்றிருக்காத துடன் ஆலோசனைகள் வழங்கப் படுமெனின் செயற்படுத்த முடியும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டின் போது திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத் திற்கான சம்பளம் மற்றும் படிகள், எரிபொருள் மற்றும் வாகன திருத்த வேலைகளுக்கு ரூபா 8,345,809 இற்கான செலவுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தது. | குப்பைகளை அகற்றுதல் முறைப்படுத்த வேண்டும். | பிரதேச சபை சட்டத்தின் 93, 94 மற்றும் 95 பிரிவுகளின் ஏற்பாடு களின் பிரகாரம் செலவுகள் மேற்கொள்ளப்பட்டன. |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் அளவிடுவதற்கான சுட்டிகளை இனங்கண்டிருக் காததுடன் தேவையான நிதி ஏற்பாடுகள் சபையினால் இனங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவி ருத்தி குறிக்கோள் கள் மற்றும் இலக்கு களை அளவிடுவத ற்கான சுட்டிகளை இனங் கண்டு அதன் பிரகாரம் வருடாந்தம் இலக்குகளை நெரு ங்கும் முன்னேற்ற த்தை அளவிட வேண்டும். | 07 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்கண்டுள்ளது. |
| (ii) | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு களை நெருங்குவதற்காக சபை தற்போது காணப்படும் பௌதீக வளங்களை முகாமைத்துவப்படுத்து வதற்காக செய்முறையொன்று மற்றும் பதவியணிக்கு பயிற்சி வழங்கும் செய்முறை ஒன்றும் இனங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவி ருத்தி குறிக்கோள் மற்றும் இலக்கு களை அளவீடு செய்வதற்கான சுட்டி களை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்தம் இலக்கு களை நெருங்கும் முன்னேற்றத்தை அளவிட வேண்டும். | 07 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்கண்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நோக்கி நெருங்குவதற்காக தேவையான வளங்கள் மற்றும் கொள்திறனை இடையறாமல் பெற்றுக் கொள்வதற்காக இயலாத ஆபத்தினை இனங்கண்டிருக்காததுடன் கருமங்களை ஒழுங்குபடுத்துவதற்காக சபையினால் செய்முறை ஒன்று இனங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான சுட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்தம் இலக்குகளை நெருங்கும் முன்னேற்றத்தை அளவிட வேண்டும். | 07 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்கண்டுள்ளது. |

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 நவம்பர் 24 ஆம் திகதிய 2047 ஆம் இலக்க வர்த்தமானியின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறிவித்தல் பலகை காட்சிப்படுத்துதல் தொடர்பான கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் 2019 ஜனவரி 11 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள பரிசோதனையின் போது திக்வெல்லை பெலியத்த பாதையில் பொருத்தப்பட்டு காட்சிப்படுத்தியிருந்த 148 விளம்பரப் பலகைகளுக்காக ரூபா 525,375 இற்கான கட்டணம் ஒன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | வர்த்தமானியின் பிரகாரம் முறைப்படி செயற்பட வேண்டும். | குறிப்பிட்ட பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | சபையினால் பேணப்பட்டிருந்த விளம்பரக் கட்டணம் பதிவேட்டின் பிரகாரம் மொபிடெல் கம்பனியினால் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள 22 விளம்பர பலகைகள் காட்சிப்படுத்துவதற்காக 2017 ஆண்டின் போது ரூபா 107,625 தொகை கட்டணம் செலுத்தியிருந்ததுடன் வெளிக்கள பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பாதையில் 08 விளம்பரப் பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக கட்டணம் ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்திய விளம்பரப் பலகைகளில் இருந்து கட்டணம் அறவிடப்பட வேண்டும். | குறிப்பிட்ட பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| ஆளணித் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 12 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், இரண்டாம் நிலையில் உள்ளவாறான எண்ணிக்கையில் மிகை பதவியுடன் 15 ஆகிய மிகை பதவியணியினை முறைப்படுத்துவதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணியின் மிகை பதவிகளை முறைப்படுத்துவதற்கு மற்றும் வெற்றிடங்கள் நிரப்பவும் வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு உள்ளூராட்சி ஆணையாளரிடம் கோரியுள்ளேன். |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| சபையின் ஊழியர் கடன் பதிவேட்டின் படி தவணைப் பணம் செலுத்தலை புறக்கணித்துள்ள ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 267,615 தொகைக்கான நிலுவை கடன் மீதியை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு விரைவாக அறவீடு செய்ய வேண்டும். | ரூபா 106,757 அறவிடப்பட வேண்டிய ஒரு ஊழியர் இறந்துள்ளதுடன் மீதிக் கடன் தொகைகளை அறவீடு செய்வதற்காக கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிட்டுள்ள 1986 மார்ச் 16 திகதிய 392/7 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம் துணைப் பகிர்வு மேற்கொள்வதற்கு உத்தேசித்துள்ள காணிப் பகுதிகள் அல்லது தரை பிரதேசம் ஒரு ஹெக்டயர் ஒன்றினை மிகைக்கும் இடத்து பாதைகளை கைவிட்ட பின்னர் காணி அல்லது தரையொன்றின் பரப்பளவில் 10 சதவீதத்தை விட குறையாத அளவு ஒன்று சனசமூக மற்றும் களியாட்ட விடயங்களுக்குப் பொருத்தமான இடங்களில் இருந்து ஒதுக்கப்பட வேண்டுமெனினும் 1993 ஆண்டின் | வர்த்தமானியின் பிரகாரம் காணிப் பகுதியை சபைக்கு பெற்றுக் கொள்ள வேண்டும். | இது தொடர்பாக சபையில் தகவல்கள் காணப்படாமையினால் இந்த காணியில் இருந்து சபைக்கு உரித்தாக்க வேண்டிய பகுதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் அல்லது எடுக்காமல் இருத்தல் தொடர்பாக நிச்சயிக்கப்பட்ட பதில் ஒன்று வழங்குவதற்கு முடியாதுள்ளது. |

போது ஏலவிற்பனை செய்யப்பட்ட 05 ஏக்கர் 02 ரூட் 9.39 பர்சஸ்க்ள (வீதி தவிர) அளவினை கொண்ட பினான்ஸ் வத்த என்ற காணியின் ஏலவிற்பனையின் போது சபைக்கு உரித்தாக்க வேண்டியிருந்த 02 ரூட் 8.94 பர்சஸ் காணிப் பகுதியினை சபைக்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சொத்துக்களை ஆவணப்படுத்தாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 50.7 பர்சஸ் கொண்ட 04 காணித் துண்டுகள், காணிகள் மற்றும் கட்டிடங்கள் பதிவேட்டில் உட்படுத்தியிருக்கவில்லை. | பீ.எஸ்.46 படிவத்தின் பிரகாரம் பதிவேடு ஒன்றில் சபைக்கு சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்களினதும் விபரங்களை உட்படுத்த வேண்டும். | காணி உறுதியின் உண்மையான தன்மையை உறுதிப்படுத்திய பின்னர் காணிகள் மற்றும் கட்டிடங்கள் பதிவேட்டில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | சபையினால் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 7,921,915 தொகைக்கான நிலையான சொத்துக்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்திருக்கவில்லை. | அனைத்து சொத்துக்களும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்த வேண்டும். | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்துவதற்காக நடவடிக்கை எடுப்பேன். |

**3.5.2 சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 06 காணித் துண்டுகள் தொடர்பாக காணிகளை அளவை செய்து எல்லை அடையாளமிடாமையினால் சபைக்குச் சொந்தமான காணிப் பகுதியில் அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என அவதானிப்பதற்கு முடியாதிருந்தது. | 2007 மார்ச் 19 திகதிய தபபா/15 இலக்கங் கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் அறிவுரை கடிதத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் எல்லைகளை அடையாளப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.5.3 விளைவற்ற/ குறைபயன்பாட்டு சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) செயற்படாத வங்கிக் கணக்கு** | | |
| சபையினால் பேணப்பட்டிருந்த 02 நடைமுறை கணக்குகள் தொடர்பாக ரூபா 96,165 இற்கான மீதி ஒன்று விளைவற்றுக் காணப்பட்டது. | விளைவற்றுக் காணப்பட்ட பண மீதியை பயன்தரு கருமம் ஒன்றிற்கு பயன்படுத்த வேண்டும். | கணக்குகளை மூடுவதற்கான விதப்புரையை சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பித்து கிடைக்கும் தீர்மானத்தின் படி நடவடிக்கை எடுப்பேன். |
| **(ஆ) காணிகள் மற்றும் கட்டிடங்கள்** | | |
| (i) சபைக்குச் சொந்தமான 06 காணிகளை எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன், இந்த காணி விளைச்சல் வரி மற்றும் வருடாந்த வரி முறையொன்றின் அடிப்படையில் வழங்குவதால் சபைக்கு மேலதிக வருமானம் ஒன்றினை பெறுவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பயன்தரு கருமங்களுக்காக ஈடுபடுத்த வேண்டும். | சபைக்குச் சொந்தமான காணிகளை உரிய முறையில் குத்தகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்பேன். |
| (ii) 1999 ஆண்டின் போது பன்முகப்படுத்தப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் தகன கூடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் பொது மக்களின் எதிர்ப்பின் காரணமாக இந்த தகனகூடத்தினை பயன் படுத்துதல் கைவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தகனகூடம் நிர்மாணிப்பதற்கு முன்னர் முன்சாத்தியக்கூறு ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் அதற்காக செலவிடப்பட்ட செலவு பயனற்ற செலவொன்றாகியுள்ளது. | பயன்தரு கருமங்களுக்காக ஈடுபடுத்த வேண்டும். | இது தொடர்பாக மேல் முறையீட்டு நீதிமன்றில் வழக்கு ஒன்று விசாரிக்கப்பட்டு வருகின்றது. |

(இ) **மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள்**

| | | |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ரூபா 2,000,000 தொகைக்கான லொறி ஒன்று 2014 செப்தெம்பர் 16 ஆம் திகதி முதல் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத மோட்டார் சைக்கிள் ஒன்று 2016 திசெம்பர் 09 திகதி முதல் செயற்படாமல் காணப்பட்ட துடன் அவற்றை திருத்தி பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பயன்தரு விடயங்களுக்கு பயன்படுத்துதல் அல்லது பயன் படுத்த முடியா விடின் அப்புறப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | லொறி வண்டி ஏல விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் ஏல விற்பனையில் விற்பனை ஆகியிருக்காததுடன் மோட்டார் சைக்கிளின் உரிமை சபை யிடம் காணப்படாமையினால் ஏல விற்பனை செய்வதற்கு முடியாதிருந்தது. |

## 3.6 ஒப்பந்த நிருவாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் சபை நிதியத்தின் கீழ் ரூபா 3,000,000 தொகைக்கான 03 வேலைத் திட்டங்கள் மற்றும் பல்வேறு ஏற்பாடுகளின் கீழ் ரூபா 60,000,000 தொகைக்கான 12 வேலைத் திட்டங்களும் செயற்படுத்து வதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஒரு வேலை திட்டம் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது. | மதிப்பீட்டின் பிரகாரம் செயற்பட வேண்டும். | நிதி ஏற்பாடுகள் கிடைக்காமை யினால் வேலைத் திட்டங்களை செயற்படுத்துவதற்கு முடியாதி ருந்தது. |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 08 செலவு விடயங்களில் சேமிப்புக் களின் கூட்டுத்தொகை ரூபா 24,427,121 தொகையாகக் காணப் பட்டதுடன் அப்பெறுமதிகள் 14 சதவீதம் முதல் 70 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமான முறையில் வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் |

| | | |
|---|---|---|
| (ஆ) வருமான விடயமொன்றினை நெருங்கியிருக்காத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 10,502,454 தொகையாக இருந்ததுடன், அப் பெறுமதி 20 சதவீதத்தில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமான முறையில் வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2009 ஜுன் 09 ஆம் திகதிய DMA/2009(i) இலக்கம் கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நிறுவப் பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை 01 கூட்டம் மாத்திரம் கூடியிருந்தது. | சுற்றறிக்கை யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென்மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/ 01/ந.ச.லே இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. நிதிப்பிரமாணம் 134 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடி இணக்கத்தை பெற்றிருந்ததுடன், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தி ருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வ தற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |